அடைக்கல அன்னை சபைத் தலைமையகம்
அரண்வாயல் குப்பம்
திருவள்ளூர் மாவட்டம் - 602 025.

சுற்று மடல் எண்: 87 நாள் : 04.11.2021

## என் பாசத்துக்குரிய அருட்சகோதரிகளே!

## நெஞ்சம் நிறைந்து உங்களை அன்போடு வாழ்த்துகிறேன்!

நமது 22-வது பொதுப் பேரவைக்கான தயாரிப்பில்
முழுஆர்வத்தோடு ஈடுபட்டு வருகிறீர்கள் என நம்புகிறேன்.
நம்மைப் பக்குவப்படுத்தி சரியான வழியில்
நடத்திச் செல்வதற்கான அருளை
இப்பொதுப்பேரவை நமக்களிக்கும் என்பது உறுதி.
எனவே நம்மை நன்கு தயாரிப்பது மட்டும்தான்
பேரவை சிறப்பாக நடைபெறுவதற்கான ஆதாரம்.

நமது 21-வது பொதுப்பேரவையின் கொள்கை நூல்
ஆழமான ஆன்மீக விழுமியங்களை உள்ளடக்கியது.
பெரும்பாலும் 'அகஒளியின் பாதையில்' என்ற தலையங்கத்தின்
முதற்பகுதியை மட்டும் உச்சரிப்பதைக் கேட்டிருக்கிறேன்.
ஆனால் தலையங்கத்தின் மற்றொரு பகுதி
மிக இலகுவாக மறக்கப்பட்டதாக உணர்கிறேன்.
காரணம் 'நம் வாழ்வியல் மெய்மையை'
எந்த அளவு மீள்வாசிப்பு செய்தோம்
என்பது கேள்விக்குறியாக உள்ளது.

வாழ்வியல் மெய்மை மீள்வாசிப்புக்கு உட்படுத்தப்பட்டிருந்தால்
நம் குழுமங்கள் விண்ணகமாக மாறியிருக்கும்.
மாறாக முரண்பாடுகள் மிகைப்படுத்தப்பட்ட சூழலில் நாம் வாழ்வது
நம் வாழ்வை மீள்வாசிப்பு செய்ய நாம் நேரம் ஒதுக்கவில்லை என்பதையே காட்டுகிறது.
இன்னும் மாற்றத்தை நாம் நம்மிலிருந்து தொடங்கவில்லை என்பது வருத்தத்துக்குரியது.
நம்மிலிருந்து தொடங்காத எந்த மாற்றமும் பலன் தராது.
பல சமயங்களில் நமது பேச்சும் செயல்பாடுகளும்
அடுத்தவர்தான் குறைபாடு உடையவர்கள் என சுட்டிக்காட்டுகின்றன.

நாம் திருந்த வேண்டிய எத்தனையோ அம்சங்களை
சுலபமாக மறந்துவிட்டு நம்மோடு வாழும் அத்தனை பேரும்
மாறவேண்டும் என வரையறை வைப்பது எப்படி நியாயமாகும்?
எல்லா மாற்றங்களும் நம்மிலிருந்தே உருவாகட்டும்.
காலம் கடந்தாலும் பரவாயில்லை.
நாம் மாற நொடிப்பொழுது போதுமானது.
குறைந்தபட்சம் 21-வது பொதுப்பேரவையின்
கொள்கை ஏட்டைப் படித்துப்பார்க்க சுயவிமர்சனம் செய்து பார்க்க,
இன்னும் நாம் வாழவேண்டிய அம்சங்களை வாழ்ந்து பார்க்க
இப்பேரவை தயாரிப்பு நமக்கு உறுதுணை புரியட்டும்.

தேர்வு காலங்களில் இதுவரை வீணாக்கிய காலத்திற்குப்
பன்மடங்காக நேரம் ஒதுக்கிப் படிக்கும் மாணவர் போல
குறைந்தபட்சம் நம் கண்முன் உள்ள
22-வது பொதுப்பேரவைத் தயாரிப்புக் காலத்திலாவது முயன்று
21-வது பொதுப்பேரவைக் கொள்கைகளை வாழ்வாக்க முயல்வோம்.

நம் நோக்கம் புதிய புதிய கொள்கை ஏடுகளை
அழகிய மொழிநடையில் உருவாக்குவது அல்ல.
அப்படியானால்
நம் நூலகத்தில் அருமையான ஆன்மீக ஏடுகள் நிறைந்திருக்கும்.
நம் வாழ்வோ வெகுதொலைவில் இருக்கும்.

திருத்தந்தை கூட நமது மாமன்றத்திற்கான நோக்கம்
அழகிய கொள்கைகளை உருவாக்குவது அல்ல
அனுபவங்களை அளிப்பது, எல்லா நிலையில் வாழ்வோரும்
பங்களிப்பைத் தருவதை உறுதிசெய்வது என்கிறார்கள்.
எனவே அனுபவங்களால் நம் பேரவையை வளப்படுத்துவோம்.
இணைந்து பயணிப்பதால் பேரவைக்கு வலுவூட்டுவோம்.

**22-வது பொதுப்பேரவையின் மையக்கருத்து:**

நமது 22-வது பொதுப் பேரவை

**“பிரபஞ்சப் பேரன்பில் ஒருங்கிணைந்து வழிநடக்க”**

**‘Synodality in the Great Love of the Universe’**

என்ற தலைப்பில் நடைபெறும் என்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**முன்தயாரிப்புக் குழு :**

பொதுப்பேரவையின் கொள்கை வரைவுகளைத் தயாரிக்க **03.11.2021** அன்று நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தின் சம்மதம் பெற்று கீழ்க்கண்ட சகோதரிகள் முன்தயாரிப்புக் குழு உறுப்பினர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

## Preparatory Committee Members

| | | |
|---|---|---|
| *01* | *0616* | *Sr. Pauline Agnes Theresa Mary – Co - ordinator* |
| *02* | *0714* | *Sr. Mariammal* |
| *03* | *0686* | *Sr. Ubahari* |
| *04* | *0571* | *Sr. Maria Kulandai Ammal (Jeyaseeli)* |
| *05* | *0702* | *Sr. Nesa Soundaram* |
| *06* | *0813* | *Sr. Maria Sagaya Vanaja* |
| *07* | *0879* | *Sr. Sebastiammal* |
| *08* | *0919* | *Sr. Lourdu Maria Bridgit* |
| *09* | *0946* | *Sr. Rose Mary* |
| *10* | *0968* | *Sr.Josephine Sagaya Mary* |
| *11* | *0989* | *Sr. Pauline Fatima* |
| *12* | *1008* | *Sr. Antony Kamala Pushpam* |
| *13* | *1103* | *Sr. Velankanni Veda Mani* |
| *14* | *1149* | *Sr. Jeba Theepa* |
| *15* | *1242* | *Sr. Fathima Mary* |

குழு உறுப்பினர்களை நெஞ்சாரப் பாராட்டுகிறோம். இறை ஒளியில் தெளிவு பெற்று கொள்கைகள் எழுதப்படவேண்டும் என்பதைப் புரிந்துகொண்டு செபமனநிலையில் இப்பணியில் ஈடுபட உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**தரவுகள் சேகரிப்பு மதிப்பீட்டு அறிக்கை தயாரிப்பு:**

முன்தயாரிப்புக் குழுவுக்கு தரவுகள் சேகரிப்பதும் நம்மை சுயஆய்வு செய்து மதிப்பீட்டு அறிக்கை உருவாக்குவதும் பொதுப்பேரவைக்கு மிகமிக முக்கியமானது. எனவே அதற்கான முயற்சியில் ஈடுபடுவது அவசியம். இதற்கு உதவும் வகையில் உங்கள் குழுமங்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு Online வழியாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். இந்தச் சுற்றுமடலுடன் அனுப்பப்படும் வினாத்தொகுப்பை இல்லத்தில் கலந்துரையாடி பதில்கள் தொகுத்து அனுப்பப்பட வேண்டும்.

**Online விழிப்புணர்வு அமர்வுகள்:**

- நமது குழுமங்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த நேரத்தில் சபைத் தலைமை அன்னை மற்றும் நிர்வாகக் குழுவில் உள்ள முன்தயாரிப்புக் குழுவினர் இணைந்து உங்கள் குழுமங்களை Online -இல் சந்திக்கிறோம்.

❖ இந்த Online சந்திப்பு ஒவ்வொரு குழுவுக்கும் 1 மணி நேரம் நடைபெறும்.

❖ தங்கள் குழுமத்திற்கான நேரத்தில் குழுமத்தின் அனைத்து சகோதரிகளும் பங்கேற்க வேண்டும்.

❖ தயவுசெய்து ஏனோதானோ என இருந்து இறையருளை வீணாக்க வேண்டாம் என ஆண்டவர், அன்னை மரியா பெயரால் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

❖ உங்கள் இல்லத்திற்கான **Online Meeting** -ல் அனைத்து சகோதரிகளும் முழுமையாகப் பங்கு கொள்ளும் வகையில் உங்கள் Online Connection-ஐ சரிசெய்து வைத்துக்கொள்ள அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

❖ 07.11.2021 ஞாயிறு அன்று Online சந்திப்பு நடைபெறுகிறது. ஒருவேளை உங்கள் பங்குப்பணி கரணமாக நேரத்தை மாற்றிக்கொள்ள அவசியம் ஏற்பட்டால் சகோ.டெரன்சியா அவர்களைத் தொடர்பு கொண்டு மாற்றம் செய்து கொள்ளுங்கள்.

❖ வட இந்தியா, இத்தாலி, பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் Under Generalate -இல் உள்ள Formation மற்றும் முதியோர் இல்லங்களுக்கு Online சந்திப்பு 08.11.2021 அன்று நடைபெறும்.

❖ Online கலந்துரையாடலுக்கான பட்டியலும் வினாத்தொகுப்பும் பின் இணைப்பாக இத்துடன் அனுப்பப்படுகிறது.

**வினாத் தொகுப்புகள் கலந்துரையாடல்:**

- இரண்டு விதமான வினாக்கள் உங்கள் குழுமங்களுக்கு அனுப்பப்படுகின்றன.
- ஒன்று குழுமத்திற்கானது
- மற்றொன்று தனிவாழ்விற்கானது.
- குழுமத்திற்கான வினாக்களை அனைத்து சகோதரிகளும் இணைந்து அமர்ந்து கூட்டமாகக் கலந்துரையாடி பதில்களைத் தொகுக்க வேண்டும்.
- தனிப்பட்ட நபர்களுக்கான பதிலை சுயஆய்வு செய்து நேர்மையோடு எழுதி அனுப்புங்கள். உங்கள் பெயர் இடம்பெற வேண்டாம். உண்மை உங்கள் பதிலில் இருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள்.
- குழும வினாத்தொகுப்புக்கான பதில்களைத் தொகுத்தும், ஒவ்வொருவரின் தனிப்பட்ட பதில்களைத் தனித்தனியாகவும் இல்லத்தலைவியிடம் பொதுவில் ஒப்படையுங்கள். அவர்கள் அனைத்தையும் சேகரித்து பொதுவில் வைத்தே பெரிய உறையில் இட்டு ஒட்டி தலைமையகத்திற்கு அனுப்ப வேண்டும்.
- **Cover** மீது

  ‘**பொதுப் பேரவை 2022 – பதில்கள்**’

  என்று எழுதி தலைமையக முகவரிக்கு அனுப்புங்கள். அவைகளை சேகரித்து முன்வரைவுக் குழுவினரிடம் ஒப்படைப்போம்.
- தனிப்பட்ட முறையில் கருத்து தெரிவிக்க விரும்பும் சகோதரிகளும் எழுதி அனுப்பலாம்.
- உங்கள் பதில்களின் தொகுப்பு தலைமையகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் **15.11.2021**

**கலந்துரையாடலுக்கான வழிமுறைகள்:**

- கலந்துரையாடலில் அமைதியாகவும் அடுத்தவரை வருத்தப்படுத்தாமலும் உங்கள் குரல், பயன்படுத்தும் சொற்கள் இருக்கும்படிப் பார்த்துக்கொள்ள வேண்டும்.
- குரலை உயர்த்தி உங்கள் கருத்தைப் பதிவுசெய்தால்தான் உங்கள் கருத்து வலிமையானது என்ற போலியான புரிதலைத் தவிர்ப்போம்.
- சொற்கள் உள்ளத்தின் ஆழத்திலிருந்து மனசாட்சியின் சம்மதத்தோடு, உண்மையாக இருக்கும்போது மட்டும்தான் ஆற்றல் பெற்றவையாக இருக்கும்.
- குறைகளை சுட்டிக்காட்டும்போது ஒருவேளை நாமும் அந்தத் தவறைச் செய்பவராக இருந்தால் நம்மையும் சேர்த்துக்கொண்டு மாற்றத்திற்குப் பரிந்துரைப்போம்.
- காழ்ப்புணர்ச்சி, வெறுப்பு, முன்தீர்மானம், சார்புத்தன்மை, குழுமனப்பான்மைகள் பகிர்தலில் வெளிப்படாமல் இருக்கும்படி ஆவியானவரிடம் செபித்த பின்பு பேசுங்கள்.
- தனிநபரின் செயல்பாடுகளை பொதுவில் சுட்டிப்பேசுவது விவாதிப்பது கண்டிப்பாகத் தவிர்க்கப்படவேண்டும்.
- எதுவும் நடந்துவிட்டுப் போகட்டும் எனறு எந்த பதிலும் சொல்லாமல் ‘கல்லறை மௌனம்’ காப்பதைத் தவிர்ப்போம்.
- அடுத்தவரைத் தூண்டிவிட்டு பேசவைத்துவிட்டு நாம் ஒளிந்து கொள்வதையும் தவிர்ப்போம். உண்மையான பேச்சு மிகமிக ஆற்றல் வாய்ந்தது. அந்த உண்மையை ஆழமாக வெளிப்படுத்துவோம்.
- நாம் வாழும் இடம் புனிதமடைய வேண்டும் என்ற நோக்கத்தில் கலந்துரையாடுவோம்.
- நம் அறை அழுக்காய் இருந்தால் தூங்கமுடியுமா? நம் சபை அழுக்காய் இருந்தால் அதில் வாழமுடியுமா? அனைவரும் இணைந்து அழுக்குகளைக் களைந்து நாம் வாழும் சபையை அழகுபடுத்தும் காலமிது. பொறுப்புணர்வோடு நடந்து கொள்வோம்.

## Communio Sunday 2021

நமது இந்திய ஆயர் பேரவை அனுப்பிய சுற்றுமடலில் நம் ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் பங்குகளிலும் **நவம்பர் 28 ஆம் நாள் Communio Sunday** –யாகக் கொண்டாடப்படுவதாக அறிவித்திருக்கிறார்கள். அந்தந்த மறைமாவட்ட ஆயர் அவர்களின் தேர்ந்து தெளிதலுக்கேற்ப இந்த நாள் மாற்றப்படலாம். Mission ஞாயிறு போல இந்த Communio Sunday–யில் வசூலிக்கப்படும் காணிக்கைகள் நம் நாட்டில் திருத்தூதுப்பணிக்காக செலவிடப்படவிருக்கிறது. எனவே ஆர்வத்தோடு இதில் பங்குகொண்டு உங்களின் பொருளாதார நிலைக்கேற்ப குழுமத்திலும் நிறுவனங்களிலும் கலந்துரையாடி நன்கொடை வழங்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**திருச்சபையின் 2023 மாமன்றம்:**

நம் திருத்தந்தை **SYNODALITY** என்ற மையக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு 2023 மாமன்றத்தை வத்திக்கானில் நடத்த இருக்கிறார். இதற்கு அனைத்து நிலையினரின் பங்களிப்பையும் உறுதிசெய்யும் வகையில் ஆங்காங்கே பங்கு, மறைமாவட்டம் ஆகியவற்றில் ஏற்பாடு செய்யப்படுகின்ற கூட்டங்களில் பங்குகொண்டு முழு ஈடுபாட்டை வெளிப்படுத்துவோம்.

நமது பொதுப்பேரவையும் திருத்தந்தை வழியில் **Synodality** –ஐ முன்மொழிகிறது.

- Synod உடைய symbol -இல் முதலில் நிற்பது ஒரு குழந்தை. இனி குழந்தைகள்தான் நம்மை வழிநடத்த வேண்டும் என்று திருத்தந்தை அறிவுறுத்துகிறார். அவரது வழியில் குழந்தை மனம், குழந்தை பண்புகளை நம்மில் வளர்த்துக் கொள்வோம்.
- ‘தான்’ தான் என்ற முனைப்பு மிக அதிகம் நம்மிடம் வளர்ந்து வருகிறது. இதனை முற்றிலும் ஒழித்து இணைந்து வழிநடப்போம்.
- எம் பணித்திட்டங்கள் அவ்வப்போது எம்மை வந்துசேரும் புதிய பணிகளால் மாற்றம் பெறுகின்றன. எனவே அலுவல் காரணமாக எம்மை சந்திக்க விரும்பும் சகோதரிகள் என்னோடு தொடர்புகொண்டு உங்கள் வருகையை முன்கூட்டியே தெரியப்படுத்துங்கள். நீங்கள் வரும்போது உங்களுக்கு நேரம் ஒதுக்க இயலவில்லை எனில் வருத்தமாக உள்ளது.

**நாம் வாழும் சபை நம் பொதுவீடு**

**அதனை அழகும் நேர்த்தியும் மகிழ்ச்சியும் உன்னதமுமானதாக மாற்றுவதே என் கனவு**

**நீங்களும் நானும் ஆத்மார்த்தமாக இதில் ஈடுபட்டாலன்றி கனவு மெய்ப்படும் சாத்தியமில்லை.**

**பேரன்போடும் மிகுந்த பணிவோடும் வேண்டுகிறேன்**

**நாம் வாழும் சபையைக் கோவிலாக்குங்கள்.**

**ஒன்றிணைந்து பயணித்தால் நம் இலக்கு**

**தொட்டுவிடும் தூரம்தான்!**

**வாழ்வியல் மெய்மையை மீள்வாசிப்பு**
**செய்யும் பணியில் தோழமையுடன்,**

Sr. Maria Philomi FBS

**சபைத் தலைமை அன்னை**